**தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர்: திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப.,**

**ந.க.எண்: 13261/2022/ஆ3** **நாள்: 07 .11.2022.**

| | | |
|---|---|---|
| **பொருள்:** | நிலம் - தேனி மாவட்டம் - ஆண்டிபட்டி வட்டம் - வருசநாடு - வாலிப்பாறை சாலை - கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் - வனபகுதி நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலமாக போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870, 871ல் மொத்த விஸ்தீரணம் 3.84.5 ஹெக்டேர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டது - முன்மொழிவுகள் வரப்பெற்றது - வனப்பகுதி நிலங்களுக்கு பதிலாக வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்கி ஆணையிடப்படுகிறது. | |
| **பார்வை:** | 1. | அரசாணை நிலை(2D) எண்.85/நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகத்துறை (HF-1) நாள்:27.11.2018 |
| | 2. | வனச்சரக அலுவலர், வருசநாடு வனச்சரகம்(இருப்பு), மயிலாடும்பாறை அலுவலக கடிதம் ந.க.எண்.183/2019 நாள்.13.08.2019. |
| | 3. | வன உயிரின காப்பாளர், மேகமலை வன உயிரினக் கோட்டம், தேனி அவர்களின் ந.க.எண்.16/2020/வ1, நாள்10.08.2020 |
| | 4. | மதுரை நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்டப்பொறியாளர் (நெ) கடிதம் ந.க.எண்: 180ஆ/2021/இநிவ, நாள்: 23.03.2022 மற்றும் 27.05.2022 |
| | 5. | இவ்வலுவலக கடித இதே எண், நாள்: 01.04.2022, 05.05.2022 மற்றும் 16.06.2022 |
| | 6. | உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கடிதம் ந.க.எண்: 4184/2022/அ5, நாள்: 18.08.2022. |
| | 7. | இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ1/2833/2022 நாள்.28.09.2022 |
| | 8. | மாவட்ட வருவாய் அலுவலரின் புலத்தணிக்கை குறிப்பு நாள்.01.11.2022 |

-------

**ஆணைகள்:**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமம், மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வருசநாடு முதல் வாலிப்பாறை வரை கி.மீ. 0/0- 9/720 வரை 3.75 மீ சாலை தரம் உயர்த்தும் பணிக்காக மாவட்ட ஊரக வளர்ச்சி கட்டுப்பாட்டிலிருந்து பார்வை-1ல் காணும் அரசாணையின்படி நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு மதுரை(நெ) கோட்டம், தேனி உட்கோட்டம் மூலமாக சாலைப்பணிகள் நடைபெற்றதாகவும் இச்சாலையில் 2352 மீ நீளமானது (நான்கு பகுதிகளாக) வனத்துறைக்கு பகுதிகளின் வழியே செல்வதால் வனத்துறையின் தடையின்மை சான்று பெற்று சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதாகவும், மேலும் இதுதொடர்பாக பார்வை 2-ல் காணும் வன உயிரின காப்பாளர், மேகமலை வன உயிரினக்கோட்டம், தேனி அவர்களின் கடிதத்தில் வனத்துறைக்குட்பட்ட (1.8872) ஹெக்டேர் நிலத்திற்கு ஈடாக இருமடங்கு நிலம் வழங்கிட வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டதாகவும் எனவே சாலைப்பணிகளை

தொடர தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில், வனத்துறைக்கு சொந்தமான இடத்திற்கு அருகில் (போடி வடக்கு மலைக்கிராமம்) வனத்துறைக்கு இரு மடங்கு மாற்று நிலம் வழங்க ஆவண செய்யுமாறு பார்வை 4-ல் காணும் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக, வனப்பகுதி நிலங்களுக்கு பதிலாக, வனத்துறையினருக்கு மாற்று இடம் வழங்க போடி வடக்குமலை கிராமத்தில், அரசு புறம்போக்கு நிலம் 3.76.0 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்து வழங்க பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்மூலம் அறிக்கை அனுப்பக் கோரப்பட்டதின்பேரில் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர், பார்வை 6-ல் காணும் கடிதத்தில் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

"தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870 மற்றும் 871 விஸ்தீரணம் 3.84.5 ஹெக்டேர் நிலமானது கிராமக் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

<u>நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிரஸ்தாப புலமானது கிராமக் கணக்குகளில் பின்வருமாறு தாக்கலாகியுள்ளது:</u>

| புல எண் | விஸ்தீரணம் ஹெக்டேர் | பாகுபாடு |
|---|---|---|
| 866 | 1.41.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| 867 | 0.39.5 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| 869 | 0.34.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| 870 | 0.54.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| 871 | 1.16.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| மொத்தம் | 3.84.5 | |

அரசாணை எண்.633 வருவாய்த்துறை, நாள்.31.10.2007-ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்த ஈட்டு நிலமானது மாநில அரசுத்துறைக்காக மாற்றம் செய்ய உத்தேசித்துள்ள நிலத்தின் தற்கால சந்தை மதிப்பினை கணக்கீடு செய்ய வழிகாட்டி பதிவேட்டின்படியான மதிப்பு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்படி நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள போடி வடக்குமலை கிராம புல எண்.866, 867, 869, 870, 871-க்கு போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி பதிவேட்டின்படி நிலமதிப்பு கோரப்பட்டதில் பிரஸ்தாப புலமானது அரசு சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் என்பதால் வழிகாட்டி மதிப்பு பூஜ்ஜியம் (0) என உள்ளது.

எனவே, மேற்படி புலம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் புல எண்கள்.865 மற்றும் 875-க்கு புஞ்சை மானாவாரி நிலங்கள் வகை 1 என்ற வகைபாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு மதிப்பு ரூ.67,000/- எனவும், வழிகாட்டி மதிப்பு போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு உள்ளது. எனவே புல எண்கள்.865 மற்றும் 875-ஆனது பிரஸ்தாப புலம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் அமைந்துள்ள வகைபாட்டில் உள்ளதால் அதன்படி நிலமாற்றம் செய்யப்படவுள்ள 3.84.5 ஹெக்டேர் (3.48864 ஏக்கர் ) நிலத்திற்கு ரூ.6,36,500/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து ஐநூறு மட்டும்) ஆகிறது. இதுவே இந்நிலத்தின் நிலமதிப்பு ஆகும்.

எனவே, போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866. 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) நிலமும் மற்றும் புல எண்கள் 869, 870, 871-ல் மொத்த விஸ்தீரணம் 2.04.00 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு நிலமும் ஆக மொத்தம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு வனப்பகுதி நிலங்களுக்கு மாற்று நிலம் வழங்கிடும் பொருட்டு நிலமாற்றம் செய்யலாம்" என அறிக்கை செய்துள்ளார்.

மேலும் இப்பொருள் தொடர்பாக புல எண்கள்.866, 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) நிலத்தினை ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு வனப்பகுதி நிலங்களுக்கு மாற்று நிலம் வழங்கிடும் பொருட்டு நிலமாற்றம் செய்ய முன் நுழைவு அனுமதி வழங்குவது தொடர்பாக, மேற்காணும் புல எண்களில் உரிமைக் கோரி வழக்குகள், மேல்முறையீடு, ஆட்சேபணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்பது குறித்தும், மேற்படி நிலங்களை நில மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை உள்ளதா என்பது குறித்தும் சென்னை நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டதில், மேற்காணும் புல எண்கள்.866, 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) நிலங்களுக்கு CLA, DOSS, High Court, Civil Court ஆகிய மேல்முறையீட்டு மன்றங்களில் இன்றைய தேதியில் மேல் முறையீட்டு மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை என பார்வை 7-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட வருவாய் அலுவலரின் 01.11.2022-ம் நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் "தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870 மற்றும் 871 விஸ்தீரணம் 3.84.5 ஹெக்டேர் பரப்பளவில் நிலையான கட்டிடங்கள், மரங்கள் மற்றும் கிணறு எதுவும் இல்லை. இந்நிலத்தில் மத வழிபாட்டு ஸ்தாபனங்கள், புராதன சின்னங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் மயானம் எதுவும் இல்லை. இந்நிலத்திற்கு மேலாக உயர் மற்றும் குறைவழுத்த மின்கம்பிகள் ஏதும் செல்லவில்லை. பிரஸ்தாப புலத்திற்கு சாலை வசதி இல்லை. எனவே ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு பதிலாக போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம்,

புல எண்கள்.866. 867, 869, 870, 871-ல் மொத்த விஸ்தீரணம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை ஈட்டு நிலமாக வழங்கி முன்நுழைவு அனுமதி வழங்கலாம்" என அறிக்கை செய்துள்ளார்.

எனவே, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரின் புலத்தணிக்கை குறிப்பின் பேரில் போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) நிலமும் மற்றும் புல எண்கள். 869, 870, 871-ல் மொத்த விஸ்தீரணம் 2.04.00 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு நிலமும் ஆக மொத்தம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ. 0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு வனத்துறையின் கட்டுப்பாட்டில் (1.8818 ஹெக்டேர்) உள்ள நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலமாக வழங்கி பிரஸ்தாப புலங்களை அரசு புறம்போக்கு-வனம் என வகைப்பாடு மாற்றம் செய்தும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி புலங்களை வனத்துறைக்கு சுவாதீனம் வழங்கியும் கிராம, வட்ட மற்றும் கணினியில் மாறுதல் செய்தும் அறிக்கை சமர்ப்பிக்க போடிநாயக்கனூர் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஓம்./க.வீ.முரளீதரன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக

பெறுநர்:

1.கோட்டப்பொறியாளர்(நெ),
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்,
[illegible]
மதுரை.

2.வனஉயிரினக் காப்பாளர், மேகமலை வன உயிரினக் கோட்டம்,
தேனி.

**நகல்:-**

1. வருவாய் கோட்டாட்சியர்,
உத்தமபாளையம் — தக்க நடவடிக்கைக்காக,

2. வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர்.

3. உதவிக் கோட்டப்பொறியாளர்,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்,
8, கஸ்தூரிபாய் தெரு,
என்.ஆர்.டி.நகர், தேனி.

4 "ஆ3" இருப்புக் கோப்பிற்கு

5. சம்பந்தப்பட்ட கோப்பிற்கு